**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.211/2021**
**Prosecution Witnesses :11**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராமர்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சுப்பிரமணியன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சாத்துர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு 20.03.2021ம் தேதி மதுரை மாவட்டம் கள்ளிக்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கள்ளிக்குடி காவல் நிலைய மனு ரசீது 62/2021 ஐ பார்வையிட்டு கள்ளிக்குடி காவல் நிலைய குற்ற எண். 73/2021 ச/பி. 147, 294(பி), 355, 323, 324, 506(1) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே 21.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முத்துவேல் மற்றும் நீலகண்டன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்தேன். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடி வந்த நிலையில் 26.03.2021ம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 12.30 மணிக்கு சிவரக்கோட்டை மாரியம்மன் கோவில் இருந்த எதிரிகளை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்துசென்று திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்புவித்து பின்பு தக்க இருநபர் ஜாமினில் நீதிமன்றத்தில் ஆஜராகும் படி அறிவுறுத்தி பிணையில் விடுவித்தேன். பின்பு 02.07.2021ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்து காயச்சான்று வழங்கிய திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பக்ரூதின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் மனு ரசீது வழங்கிய முதல் நிலைய காவலர் பிரதீபன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 02.07.2021ம் தேதி எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 355, 323, 324, 506(1) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Actன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் கு.வி:**

13.03.2021ம் தேதி மதியம் 3.30 மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் யார் கொடுத்தார் என்றால் கார்த்திஸ்வரி ஆவார். என்னிடம் காட்டப்படும் புகாரில் இடைசெருகலான வரிகளும் அடித்தல் திருத்தலும் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 19.30 மணிக்கு. அ.சா.1 மருத்துவமனையில் எத்தனை மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் 13.03.2021ம் தேதி மதியம் 2.30 மணிக்கு. பொதுவாக மனு ரசீது போடப்பட்ட புகாரில் சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர் அழைப்பாணை அனுப்பி தான் விசாரிப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அதுபோன்று விசாரித்துள்ளோமா என்றால் இல்லை. பொதுவாக காயம்பட்ட நபர் ஏதேனும் மருத்துவமனையில் இருந்தால் தகவல் வரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு ஏதேனும் தகவல் மருத்துவமனையில் இருந்து வந்ததா

என்றால் வந்தது. இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தான் பெறப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரர் எப்போது மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்றால் அன்றைய தினமே டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி எதிரிகளின் தாயார் 4வது எதிரி செண்பகவள்ளி கொடுத்த புகாரின் பேரில் மேற்படி புகார்தாரர் மற்றும் அவரது சகோதரிகளின் மீது குற்ற எண் 72/2021 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்தவரும் எதிரிகளும் உறவினர்கள் என்றால் சரிதான். 1ம் எதிரி காவல்துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். இடப்பிரச்சினை சம்பந்தமாக புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். 4ம் எதிரி செண்பகவள்ளி என்பவர் அந்த வீட்டில் சுமார் 30 வருடமாக குடியிருந்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 4ம் எதிரி பேரில் வீடு பட்டா இருந்ததால் தான் மற்ற எதிரிகள் சேர்ந்து வீட்டை இடித்துவிட்டார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் முறையான ஆவணங்களை பார்வையிட்டு விசாரித்திருந்தால் உண்மை விபரம் தெரிந்திருக்கும் என்று சொன்னால் சம்பவமானது குற்ற வழக்கு அது குறித்து தான் விசாரித்தேன். மற்றவை குறித்து விசாரிக்கவில்லை. முறையாக மனு ரசீது போட்ட பிறகு வருவாய் துறையினருக்கு நான் முறையான தகவல் அனுப்பி அதன் பேரில் விசாரணை செய்திருந்தால் மேற்படி எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரரான கார்த்திஸ்வரி கொடுத்துவிட்ட புகாரை கோடிஸ்வரி தான் கொண்டு வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிரி அரசு வேலையில் இருப்பதால் அவர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக 4ம் எதிரி பாத்தியப்பட்ட வீட்டில் பாகம் பெற வேண்டும் காரணத்தினால் தான் முறையாக விசாரணை செய்யாமல் மேற்படி எதிரிகளுக்கு சம்மன் எதுவும் அனுப்பாமல் முதல் தகவல் அறிக்கை தவறுதலாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முறையாக நான் விசாரணை செய்திருந்தால் சம்பவத்தில் யார் பக்கம் தவறு நடந்திருக்கும் என்று தெரியவந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம்

இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பி.எஸ்.ஓ விதிகளை நான் சரிவர பின்பற்றாமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.